ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

(ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். ஸோமயாஜி அக்னிஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹாதேசிக ஸ்வாமியிடம் கேட்டறிந்து தொகுத்தவை)

தொகுப்பு: ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். யஜ்ஞவராஹ தாதயார்ய மஹாதேசிகன், மங்களகிரி

==========================================================================================

## அறிவுரை 28. அலர்மேல் மங்கை சார்வால் சார்.

தாயாரிடம் ப்ரபத்தி பண்ணி அவள் மூலமாகப் பெருமாளிடம் ப்ரபத்தி பண்ண வேண்டும்.

व्यासार्यैश्चोक्तम् । प्रतापोष्मल-पितृव्य-दुरासद-भगवत्-समाश्रयण-सिद्धये
पुरुषकारानुप्रविष्ट-वात्सल्य-निर्भर-लक्ष्मी-समाश्रयणं
श्रीमत्-शब्द-विवरण-मुखेन अभिधीयते इति

வ்யாஸார்யைஶ்சோக்தம் । ப்ரதாபோஷ்மள-பித்ருவ்ய-துராஸத-பகவத்-ஸமாஶ்ரயண-ஸித்தயே புருஷகாராநுப்ரவிஷ்ட-வாத்ஸல்ய-நிர்பர-லக்ஷ்மீ-ஸமாஶ்ரயணம் ஸ்ரீமத்-ஶப்த-விவரண-முகேந அபிதீயதே இதி

- சதுச்லோகீ பாஷ்யம்

சதுச்லோகீ ஸ்தோத்ரத்தின் இரண்டாம் சுலோக உரைமுடிவில் அருளுகிறார். பெருமாளிடம் சரணாகதி பண்ணுவதற்குமுன் லக்ஷ்மியிடம் ப்ரபத்தி பண்ணும் வழக்கம் ஓராண் வழியாக இருக்கிறதே. அது எப்படிப் பொருத்தமாகிறது என்பது குறித்து.

நடாதூரம்மாளிடம் கேட்டு எழுதும் வ்யாஸார்யர் சொல்கிறார்: பெருமாள் நமக்கெல்லாம் பிதா. பராக்கிரமச்சூடு கொண்டவராதலால் எளிதில் அணுக முடியாதவர். அவரிடம் நாம் புகலடைவது கைகூடுவதற்காகத் தாயாரின்

பரிந்துரை (சிபாரிசு) தேவையாகிறது. அவள் வாத்ஸல்யம் மட்டுமே நிரம்பியவள். அவளைப் புகலடைய வேண்டும். துவயமந்திரத்தில் ஸ்ரீமத் என்ற சொல்லை விவரிப்பதன் மூலம் இது சொல்லப்படுகிறது.

சார்வு நமக்கென்றும் திரு என்கிறார் முதலாழ்வார்களில் ஒருவர். அவளைச் சார்ந்த பிறகுதான் பெருமாளிடம் சரணடைவது என்று ஸம்பிரதாயம். பிராட்டியின் புருஷகாரம் இல்லாமல் நேரடியாகப் பெருமாளிடம் போய்ச் சரணடைய வேண்டாம்.

****************